8. அறிவிப்புகள்--(தொடர்ச்சி)

(ஊ) காமன்வெல்த் பாராளுமன்ற (தமிழ்நாடு பிரிவு) சங்கப் பொதுக்குழு கூடுதல் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை உறுப்பினர்களுக்கு ஓர் அறிவிப்பு. இன்று மாலை 5 மணிக்கு நடைபெறுவதாக இருந்த காமன் வெல்த் பாராளுமன்றச் சங்கத்தின் உறுப்பினர்களுடைய பொதுக் குழுக் கூட்டம் முன்னாள் மேலவை மண்டபத்தில், பேரவைக் கூட்டம் முடிந்தவுடன் நடைபெறும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை, மீண்டும் நாளை (6–5–1995) காலை 10–00 மணிக்குக் கூடும், வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 5–48 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

12. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

123. 1979–ஆம் ஆண்டு பொருட்கள் (மதுபான சட்டத்தின் கீழ் பறிமுதல் செய்யப்பட்ட) விற்பனை, ஒருவகை செய்தல் விதிகளில் திருத்தம் செய்வது குறித்து மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறையின் 25–10–1994 ஆம் நாளிட்ட 187 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.).

124. 1993-94–ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் இருபத்தி மூன்றாவது ஆண்டறிக்கை (1971 ஆம் ஆண்டு வேளாண்மைப் பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1971) 33 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்.)

125. 1992-93–ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு திரையரங்குக் கழகத்தின் இருபத்தொன்றாவது ஆண்டறிக்கை. (1956–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்.)

[1995 மே 5

126. 1991-92-ஆம் ஆண்டிற்கான அண்ணா பல்கலைக் கழகத்தின் ஆண்டுக் கணக்குகள் மீதான தணிக்கை அறிக்கை. (1978 ஆம் ஆண்டு அண்ணா பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1978) 26(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது) (தமிழ், ஆங்கிலம்).

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

170. பத்தாவது நிதிக் குழுவிற்கு தமிழ்நாடு அரசு அளித்த குறிப்புத் தொகுதியின் சுருக்கமும், பத்தாவது நிதிக் குழுவின் முக்கிய பரிந்துரைகளும் (தமிழ், ஆங்கிலம்)

171. மானியக் கோரிக்கை எண் 8-தேர்தல்கள் பற்றிய வரைவு உரை மற்றும் கொள்கை விளக்கக் குறிப்பு (தமிழ், ஆங்கிலம்).

172. மானியக் கோரிக்கை எண் 41-ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுகால நன்மைகளும் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1995-96. (தமிழ், ஆங்கிலம்).

173. மானியக் கோரிக்கை எண் 41-விடுதலைப் போராட்ட வீரர்களுக்கும், முன்னாள் இந்திய தேசிய இராணுவத்தில் பணியாற்றியவர்களுக்கும் ஓய்வூதியங்களும் மற்றும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1995-96 (தமிழ், ஆங்கிலம்).

174. மானியக் கோரிக்கை எண் 42-பல்வகை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1995-96 (தமிழ், ஆங்கிலம்).

175. மானியக் கோரிக்கை எண் 60-பல்வகை மூலதனச் செலவு குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1995-96 (தமிழ், ஆங்கிலம்).

176. மானியக் கோரிக்கை எண் 61-மாநில அரசு வழங்கும் கடன்களும் முன் பணங்களும் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1995-96 (தமிழ், ஆங்கிலம்).

177. மதிப்பீட்டுக் குழுவின் பதினேழாவது அறிக்கை, 1994-95.

178. மதிப்பீட்டுக் குழுவின் பதினெட்டாவது அறிக்கை, 1994-95.